# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2020 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## பகுதி A

**வினா இல. 01**

இது 25 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவாகும். புதிய பாடத்திட்டத்தின் கீழ், உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் என்ற பாடம் தொடர்பான அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இப்பகுதிக்கு முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்ததுடன் அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு 10 – 25 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

விடைகளை மதிப்பீடு செய்யும்போது அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**(1.1)** LKAS 02 – தொக்குகள் நியமம் பற்றிய மாணவர்களின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர்.

**(1.2)** இவ்வினா கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய அறிவையும் கருதப்பட்ட ஆண்டிற்கான செலவினங்களை எவ்வாறு சரியாக அடையாளங் காண்பது என்பது பற்றிய அறிவையும் பரீட்சித்திருந்தது. இதற்கு 50 % ஆன பரீட்சார்த்திகளால் திருப்திகரமான விடைகள் அளிக்கப் பட்டிருந்தன.

**(1.3)** இவ்வினாவானது சொத்து விற்பனைச் செயன்முறை பற்றியும் விற்பனை மூலமான இலாபம் அல்லது நட்டத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றியும் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**(1.4)** கிரயக் கணக்கீட்டின் நோக்கங்கள் பற்றி இவ்வினா பரீட்சித்திருந்தது. பொதுவாக, குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் கிரயக் கணக்கீட்டின் நோக்கங்களைச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். ஏனையோர் எதிர்பார்க்கப்பட்ட விடைகளை வழங்குவதற்குத் தவறியிருந்தனர்.

**(1.5)** இங்கு *"பரிப்பு"* என்னும் பதத்தை பொருள் வரையறை செய்யுமாறு கேட்கப்பட்டது. விடைகள் திருப்திகரமாக இருந்தன. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே திருப்திகரமான விடைகளை அளித்திருக்கவில்லை.

**(1.6)** பங்குடமையின் மூலதனம் மற்றும் பங்காளர்களுக்கான சம்பளங்கள் என்பன தொடர்பில் 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**(1.7)** இங்கு அர்ப்பணிப்பு விகிதத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகளிடம் கணித அறிவு குறைவாகக் காணப்பட்டதால் அர்ப்பணிப்பு விகிதத்தைச் சரியாகக்

கணிப்பிடுவதில் அவர்கள் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் அர்ப்பணிப்பு விகிதத்தைக் கணிப்பிடும் முறையை எழுத்தில் சரியாக எழுதியிருந்தனராயினும் கணித அறிவில் காணப்பட்ட குறைபாடு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட விடையைப் பெற அவர்கள் தவறியிருந்தனர்.

**(1.8)** இங்கு தரப்பட்டிருந்த நிகழ்வுகள் LKAS 10 நியமத்திற்கு ஏற்ப செம்மையாக்கல் நிகழ்வுகளா அல்லது செம்மையாக்கல் அற்ற நிகழ்வுகளா என்பதைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இதற்கு அளிக்கப்பட்டிருந்த விடைகள் திருப்தியாக இருந்தன.

**(1.9)** இங்கு சிக்கனக் கட்டளைக் கணியத்தை (EOQ) கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. EOQ பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு திருப்திகரமாக இருந்தது. இந்த வகையான கணிப்பீடுகளைச் செய்வதற்கு இந்த மட்டத்திற்குத் தேவையான கணித அறிவு இன்னும் கொஞ்சம் மேம்படுத்தப்பட வேண்டும்.

**(1.10)** இங்கு பணி ஒன்றின் விலையைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சிலரால் கிரயம் மீதான 20% இலாபத்தைக் கணிப்பிட முடியவில்லை. மேலும், சிலரால் 150% நேர் கூலிக் கிரயத்தைக் கணிப்பிட இயலவில்லை. எவ்வாறாயினும், படிமுறைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்பட்டன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

(a) நிறையேற்றப்பட்ட சராசரிக் கிரய (WAC) முறையைப் பயன்படுத்தி தொக்குகள் பேரேட்டைத் தயாரிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் WACC முறையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக தொக்குகள் பேரேட்டைத் தயாரிப்பதற்கு FIFO, LIFO முறைகளைப் பயன்படுத்தியிருந்தனர்.

(b) இங்கு விபரமான சம்பளப் பட்டியல் தயாரிப்பு பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகளின் விடைகள் திருப்திகரமானதாக அமைந்திருந்தன. சில பரீட்சார்த்திகள், படிகளை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்ப்பதையும் சட்டநியதி மற்றும் சட்டநியதியற்ற ஊழியர்களின் கழிப்பனவுகளை அடிப்படைச் சம்பளத்திலிருந்து கழிப்பதையும் அடையாளங் காணத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொழில்தருநரின் பங்களிப்புகளையும்கூட தனிப்பட்டவர்களின் சம்பளங்களிலிருந்து கழித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 03

இவ்வினா சேவைத் திணைக்களங்கள் உள்ளிட்ட உற்பத்தி நிறுவனமொன்றின் பல்வேறு பிரிவுகளுக்கு மத்தியில் மேந்தலைகளின் உறிஞ்சல் பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலும் எல்லா பரீட்சார்த்திகளும் மேந்தலை உறிஞ்சல் அட்டவணையைச் சரியாகத் தயாரித்திருந்த போதிலும், அவர்களில் பலர் மேந்தலை உறிஞ்சல் வீதத்தைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் சேவைத் திணைக்களங்களுக்கு மேந்தலைகளைப் பகிராது மேந்தலை உறிஞ்சல் கூற்றினைத் தயாரித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 04**

இவ்வினா இலாப நோக்கற்ற அமைப்புகளின் வருமானக் கூற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அவர்களில் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சிறப்பாக விடையளித்திருந்தனர்.

எவ்வாறாயினும், பின்வரும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன :

(1) வியாபாரக் கணக்கில் காட்டப்பட வேண்டிய பதிவுகள் வருமான, செலவினக் கணக்கிலும், வருமான, செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய பதிவுகள் வியாபாரக் கணக்கிலும் காட்டப்பட்டிருந்தன.

(2) முன்கூட்டியே செலுத்தப்பட்ட அங்கத்தவர் சந்தா, அங்கத்தவரின் சந்தாக் கணக்கில் சரியாகப் பதியப்படாததோடு, ஆண்டிற்கான சந்தாத் தொகையும் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(3) சில பரீட்சார்த்திகள் நிலையான சொத்துக்களை வருமான, செலவினக் கணக்கில் உட்படுத்தி இருந்தனர்.

(4) மின்சாரம் மற்றும் சம்பளங்கள் என்பன வினாவில் அறிவுறுத்தப்பட்டதுபோல் பகிரப்படவில்லை.

(5) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு சரியாகச் செய்யப்படவில்லை.

(6) அட்டுறு மின்சாரம் சரியாகச் செம்மையாக்கம் செய்யப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

இங்கு பங்குடமை வியாபாரம் ஒன்றின் இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கு, பங்காளர்களின் மூலதனக் கணக்கு, பங்காளர்களின் நடைமுறைக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் கேட்கப்பட்ட கணக்குகளைச் சரியாகத் தயாரித்திருந்தனர். கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரம் எடுப்பனவுகளை இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கில் உள்ளிட்டிருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரம் வினாவில் கேட்கப்பட்டதற்கு இணங்க **திலக்கிற்குச்** செலுத்த வேண்டிய தொகையை கடன் கணக்கிற்கு மாற்றியிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

பூரணமற்ற பதிவுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களைக் கொண்ட **''அன்னியின் ஒன்லைன் உணவுகள்''** நிறுவனத்தின் பரீட்சை மீதியைத் தயாரிக்கும் அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் விற்பனைத் தொகை மற்றும் மாத இறுதிக் காசு மீதியைத் தவிர பரீட்சை மீதிக்குரிய அதிகளவான பெறுமானங்களை துணிந்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் காசு எடுப்பனவுகளை விற்பனை மொத்தத்திற்குச் சேர்ப்பதற்குத் தவறியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நியாயமானளவு திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி C

**வினா இல. 07**

இவ்வினா பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. மேலும், கணக்கீட்டு நியமங்கள், இரட்டைப் பதிவுகள், கணக்கீட்டுக் கொள்கைகள் போன்றவை பற்றியும் இங்கு பரீட்சிக்கப்பட்டிருந்தன.

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் செய்முறைகள் இணைக்கப்படவில்லை. இதனல் ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் அவர்களால் பெற முடியவில்லை.

(2) இறுதித் தொக்குச் செம்மையாக்கமானது குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் காலாவதியான தொக்குகளைக் கருத்திற்கொண்டு சரியாக செம்மையாக்கம் செய்யப்படவில்லை.

(3) பெரும்பாலான பரீட்சார்த்திகளால் வருமான வரிச் செம்மையாக்கமானது அதன் செய்முறை களுடன் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அவர்களில் பலர் மீளாய்வு ஆண்டிற்கான சரியான வருமான வரித் தொகையினைக் கணிப்பிட்டிருக்கவில்லை. மேலும், அவர்களில் பலர் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையினைச் சரியாகக் காட்டியிருக்கவில்லை.

(4) வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றுக்காகப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவமைப்புகள் சில பரீட்சார்த்திகளால் பின்பற்றப்படவில்லை.

(5) சில பரீட்சார்த்திகளால் உபகாரப் பங்கு வழங்கலானது நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காட்டப் பட்டிருக்கவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் சில பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டியிருந்ததுடன் வேறு சில பெறுமானங்களை ஆயிரங்களில் மாற்றாது அவ்வாறே கருத்திற் கொண்டிருந்தனர்.

(7) ரூபா 270,000/- இனை பதிவழிப்புச் செய்த பின்னர் காணப்படும் வியாபார வருமதிகள் மீதியின் மீது 5% இல் ஐயக் கடன் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட வியாபார வருமதிகள் தொகையில் 5% இனைக் கணிப்பிட்டிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

- - -

**பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:**

(1) கடந்தகால வினாத்தாள்கள் / முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் ஆகியவற்றில் பயிற்சி பெறுவது செயலாற்றுகையை மேம்படுத்த உதவும். அதே அமைப்பைக் கொண்ட விடயங்கள் மீளவும் பரீட்சிக்கப்படலாம் என்பதால், இது அனைத்து நேரங்களிலும் நன்மையைப் பெற்றுத்தரும்.

(2) உமது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தவும். ஒவ்வொரு வினாவுக்கும் செலவு செய்ய வேண்டிய நேரத்தை, வினாக்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளை பார்த்து மதிப்பீடு செய்யலாம்.

(3) வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறை களையும் சரியான முறையில் வெளிக்காட்டவும்.

(4) வினாவைப் பல தடவைகள் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

(5) கையெழுத்தைத் தெளிவாக எழுதுவதுடன் வினாக்களுக்கு உரியவாறு இலக்கமிடவும்.

(6) சிறந்த ஆயத்தத்துடன் பரீட்சையில் சித்தியடைகின்ற மிகுந்த நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

(7) இந்த மட்டத்துடன் தொடர்புடைய கணக்கீட்டு நியமங்களைக் கற்கவும். இந்தப் பாடத்துடன் தொடர்புடைய பாடப்புத்தகம், சஞ்சிகைகளைக் கற்பதோடு, குறிப்பாக இந்தப் பாடம் தொடர்புடைய ஏனைய விடயங்களையும் விளங்கிக் கொள்ளவும்.

- * * * -